ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஒடும்புள் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஓடும்புள் ॥

*ஈச்வரன் ஆர்சவ குணமுடையவன்*

*‡ஓடும் புள்ளேறி⋆ சூடும் தண் துழாய்⋆*
*நீடு நின்றவை⋆ ஆடும் அம்மானே* (1)

*அம்மானாய்ப் பின்னும்⋆ எம்மாண்பும் ஆனான்⋆*
*வெம் மா வாய் கீண்ட⋆ செம் மா கண்ணனே* (2)

*கண்ணாவான் என்றும்⋆ மண்ணோர் விண்ணோர்க்கு⋆*
*தண்ணார் வேங்கட⋆ விண்ணோர் வெற்பனே* (3)

*வெற்பை ஒன்றெடுத்து⋆ ஒற்கம் இன்றியே⋆*
*நிற்கும் அம்மான் சீர்⋆ கற்பன் வைகலே* (4)

*வைகலும் வெண்ணெய்⋆ கை கலந்துண்டான்⋆*
*பொய் கலவாது⋆ என் மெய் கலந்தானே* (5)

*கலந்தென்னாவி⋆ நலங்கொள் நாதன்⋆*
*புலங்கொள் மாணாய்⋆ நிலம் கொண்டானே* (6)

*கொண்டான் ஏழ் விடை⋆ உண்டான் ஏழ் வையம்⋆*
*தண் தாமம் செய்து⋆ என் எண் தான் ஆனானே* (7)

*ஆனான் ஆன் ஆயன்⋆ மீனோடேனமும்⋆*
*தான் ஆனான் என்னில்⋆ தான் ஆய சங்கே* (8)

*சங்கு சக்கரம்⋆ அங்கையில் கொண்டான்⋆*
*எங்கும் தானாய⋆ நங்கள் நாதனே* (9)

*நாதன் ஞாலம் கொள்⋆ பாதன் என்னம்மான்⋆*
*ஓதம் போல் கிளர்⋆ வேத நீரனே* (10)

‡நீர்புரை வண்ணன்⋆ சீர் சடகோபன்⋆
நேர்தல் ஆயிரத்து⋆ ஓர்தல் இவையே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥